# என்னில் வாழ்ந்திடும் யேசுவே

என்னில் வாழ்ந்திடும் யேசுவே
என் இதயம் அறிவாயோ
குறைகள் நிறைந்த அதிலே நீ
உறைந்திட விரைவாயோ

**1**
வழியறியாதலைகின்றேன்
வழியாய் நீ அமைகின்றாய்- (2)
நிலை பிரிந்தே உளம் உடைந்தேன்
எனைத் தொடர்ந்தே துயர் துடைத்தாய்- (2)
ஓர் ஆடு நான் உன் மந்தைனின்று
தவறினேன் என நினைத்தாயோ
உளக்; கோயில் தேடி வந்த விருந்தே
மனநோயைத் தீர்க்கும் இனியநல் மருந்தே
ஈடு என்ன உன் அன்பிற்கு

**2**
வழி புரிந்தே அழிகின்றேன்
பலியாய் நீ அழிகின்றாய் -(2)
விண்ணகப் புகழைத் துறந்தாய்
மண்ணவனாய் இங்கு பிறந்தாய் -(2)
விண் விட்டில் என்னைச் சேர்க்கவிழைந்து
துன்பம் ஏற்றிடத் துணிந்தாயோ
என் வீட்டு மகிழ்வு கொள்ளும் இறையே
உனை ஏற்கும் இதயம் கொள்ளும் நிறையே
காட்டும் அன்பிற்கு எல்லையுண்டோ. (என்னில்....)